ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1941/30 - 2015 නොවැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2015.11.20
1941/30 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

3 இ பிரிவின் கீழான கட்டளை

2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாக திருத்தப்பட்ட, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2015.11.21 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் இதனகத்திற்குப் பின்னர் உள்ளவாறான அட்டவணை மூலம் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொருட்கள் மீது உற்பத்தி வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவதாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

மேற்குறித்த சட்டத்தின் 3இ பிரிவின் கீழால் வெளியிடப்பட்ட 2014.10.24 ஆந் திகதிய 1885/43 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமான அறிவித்தலிலுள்ள கட்டளைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 1,
2015, நவெம்பர் 20.

**அட்டவணை**

(1) இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் செய்து கொண்ட பல்வேறு உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனங்கள்/பொருட்கள்.

(2) கைத்தொழிற்துறை அமைச்சரினால் சிபாரிசு செய்யப்பட்ட 30% க்கு குறையாத உள்நாட்டில் பொருத்தப்பட்ட அல்லது உள்ளூர் பெறுமதி சேர்ப்புடன் தயாரிக்கப்படுகின்ற இ. மு. கு. இ. 84 மற்றும் 85 என்பனவற்றிற்கு கீழான பொருட்கள்.

(3) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 107 (அ) பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள பயணிகள் பிரயாண மூடைகள் (விலக்களிப்புக்கள்) ஒழுங்குவிதிகளின் கீழ் தீர்வையின்றி அப்புறப்படுத்துவதற்கு உரித்துடைய பொருட்கள் யாவும். (235 ஆம் பிரிவின் கீழ்).

(4) கப்பல் இருப்புப் பொருட்களாக அல்லது மீள் ஏற்றுமதிக்காக உபயோகிப்பதற்காக பிணைக்குதத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பொருட்கள்.

(5) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவைகளும் இலங்கையினுள் எந்த ஏற்றுமதியாளருக்கும் வழங்கப்பட்டவைகளும், அத்தகைய உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்பது பற்றி உற்பத்தி வரிப் பணிப்பாளர் அதிபதி திருப்தியுறும் வண்ணம் போதிய அளவு சான்று வழங்கப்பட்டுள்ளவைகளுக்குமான பொருட்கள் யாவும்.

(6) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் II ஆம் பிரிவின் (ஊ) 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதனைப் போன்று, நாட்டினது பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் இனங்காணப்பட்டதும், அரசாங்கத்தினால் வரி செலுத்தப்பட வேண்டியதுமான, ஏதும் விசேட கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்குத் தேவையான தனிநபர் போக்குவரத்துக்காக வடிவமைக்கப்பட்ட வாகனங்கள் நீங்கலாக உற்பத்தி வரி செலுத்தப்பட வேண்டியுள்ள பண்டங்கள் ஒவ்வொன்றுக்கும்.

12- 322

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.